*2025 – நவம்பர் மாதம் – 06 ஆம் தேதி வியாழக்கிழமை*

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 328/ 2024*

*2025–ம் ஆண்டு 2025 – நவம்பர் மாதம் – 06 ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW 2 , வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | *PW 2* , செந்தில்முருகன் |
| தந்தையார் பெயர் | : | ராஜகோபால் |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | பதிவறை மேலாளர் |
| வயது | : | 36 |

<u>தேதி: 06.11.2025.</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் தற்பொழுது பெரம்பலூர் SPT மருத்துவமனையில் பதிவறை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்து பதிவேடு, காயச்சான்று ஆகியவற்றின் உண்மை நகல்களைக் கொண்டு வந்துள்ளேன். 18.11.2024–ஆம்தேதியிட்ட எங்கள் மருத்துவமனையின் விபத்து பதிவேட்டின் கார்பன்நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.11.2024 தேதியிட்ட எங்கள் மருத்துவமனையால் வழங்கப்பட்ட காயச்சான்றின் உண்மை நகலைத் தாக்கல் செய்கிறேன். அது **மூ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ள மேற்படி ஆவணங்களைத் தயார் செய்த மருத்துவரை விசாரித்தால் மட்டுமே உண்மை தெரிய வரும் என்று சொன்னால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் மூ.சா.ஆ.2 காயச்சான்றிதழில் காயங்களின் விவரங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/–கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**